மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, there is no such proposal.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, it will help us and it would be preferable if such buses were run especially for women on holidays in the mornings. Will the Government consider the request?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இப்பொழுதே நெரிசல் நேரங்களில் விடப்படும் பஸ்கள் திரும்பி வரும்போது, போதிய பெண் பிரயாணிகள் இருப்பதில்லை. ஆகையினால் நஷ்டத்தில் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, விடுமுறை நாட்களிலும் விஸ்தரிப்பது என்பதற்கான பிரச்சனை எழவில்லை.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, விடுமுறை நாட்களிலாவது, அலுவலக நேரத்தில் விடுவது போல், கூட்டம் அதிகமாக வருகிற நேரத்தில் அதிகமாக பஸ்கள் விட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அப்படிப்பட்ட வசதி இப்போது நடைமுறையில் இருக்கிறது.

Periyar Power Unit.

* 15. *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether a settlement has been arrived at between Tamil Nadu and Kerala State regarding the Periyar Power Unit; and

(*b*) if so, the details thereof and the date on which the agreement has been signed?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:

(அ) ஆம்.

(இ) ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படி பெரியாற்றின் நீரைப் பயன்படுத்தி நீர் மின்சக்தி உற்பத்தி செய்யவும், இது காரியத்துக்காகத் தேவைப்படும் எல்லாப் பொறிகளையும் நிறுவுவதற்குமான உரிமை தமிழ்நாடு அரசுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. இம்மாநிலத்தினால் மின் சக்தி உற்பத்திக்காகப் பெரியாற்று நீரைப் பயன்படுத்துவதற்கான உரிமைத் தொகையை (1) 350 மில்லியன் யூனிட்டுகள் வரை உற்பத்தி செய்யப்படும் மின்சக்திக்கு கிலோ வாட் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 12 என்ற விதத்திலும் (2) 350 மில்லியன் யூனிட்டுகளுக்கு மேலாக உற்பத்தி செய்யப்படும் மின் சக்திக்கு கிலோவாட் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 18 என்ற விதத்திலும், கேரள அரசு பெறும்.

பெரியாறு நீர்மின்சக்தித் திட்டம் குறித்து தமிழ்நாடு—கேரள மாநிலங்களுக்கிடையே 1970-ம் ஆண்டு மே மாதம் 29-ம் தேதி அன்று ஒப்பந்தம் கையெழுத்தாகியது.

Dr. H. V. HANDE : It is more than a year since the agreement was entered into and since then we have begun to receive power supply as a result of this project. Will the Hon. Minister tell us, what is the quantity of total power supply that we have received actually during the current year after the signing of the agreement?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பொதுவாக தண்ணீர் அதிகமுள்ள நேரங்களில் குறைந்தது 20 மெகாவாட் வரையில் பெரியாற்றில் எடுக்கலாம் என்று இருக்கிறது. ஆனால் ஒப்பந்தம் 29-ம் தேதி கையெழுத்து போட்டாலும் அதற்கு முன்பே 1958-லிருந்தே நாம் உற்பத்தி செய்து மின்சாரத்தைப் பெற்றுக் கொண்டு வருகிறோம். ஒப்பந்தம் முடிவதற்கு முன்பே அனுமதி கொடுத்து இருந்தார்கள். அதற்கு முன்னால் 1958-லிருந்து உற்பத்தி செய்து கொண்டு இருக்கிறோம். கையெழுத்து தாற்காலிகமாக 1970-ஆம் ஆண்டு முற்றுப்பெற்று இருக்கிறது. 99 ஆண்டு காலத்திற்கு இந்த ஒப்பந்தத்தின் மூலம் நமக்குப் பயன் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சேலம் அஸ்தம்பட்டி காவல் நிலையத்தில் காவலில் வைக்கப் பட்டிருந்த மஞ்சுளா என்ற பெண்ணின் மரணம் குறித்து

Mr. SPEAKER : The hon. Members, Thiru K. T. K. Thangamani, Thiru S. Algarswamy and Thiru N. Marudachalam have given notice of an adjournment motion under Rule 42 of the Assembly Rules to discuss the following matter of urgent public importance, namely—

'The death of 18 year old girl Manjula, daughter of a Bank employee, Thiru Sevi Gounder, in Salem on 2nd June 1971 after four days of detention under Police custody in Asthampatti Police station, Salem, under suspicious and questionable circumstances.'

The hon. Member Thiru Thangamani will explain as to how this comes under Rule 42.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக இன்று காலையில் கூட 25 தந்திகள் வந்து இருக்கின்றன. சேலத்தில் மக்கள் மத்தியில் ஒரு பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டு இருக்கிறது. அங்கு ஒரு விசேஷம் நடந்ததாகவும் அந்த விசேஷத்தில் அந்த வீட்டில் பணியாற்றிக் கொண்டு இருந்த 18 வயது பெண் மஞ்சுளா என்பவள் ஏதோ சாமான் திருடி இருப்பார்